1990 ஏப்ரல் 19]

வனவிலங்குகள் சரணாலயம் அமைத்தல்

*868. திரு. வி. கே. சின்னசாமி :

மாண்புமிகு இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியார் மாவட்டம், பவானிசாகர் வனச்சரக பகுதியில் வன விலங்குகள் சரணாலயம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பவானிசாகர் பகுதியில் இருக்கின்ற வனச்சரகத்திலேதான் அதிகப்படியான மான்கள், தமிழ் நாட்டிலேயே எங்கேயும் இல்லாத அளவிற்கு லேக்பக் என்ற ஒருவிதமான மான்கள் இருக்கின்றன. அடுத்தபடியாக, புள்ளி மான்கள், யானைகள், சிறுத்தைப் புலிகள் போன்றவை, ஆயிரக்கணக்கான லட்சக்கணக்கான இனங்கள் அங்கே வாழ்கின்றன. அவை இன்றைக்குப் பாதுகாப்பற்ற நிலையில், சமூகவிரோதிகளுக்கு வனத்துறை அதிகாரிகளே உடந்தையாக இருந்து, அவற்றை உணவிற்காக சுட்டுக் கொன்று கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவை காப்பாற்றப்பட வேண்டுமானால் நிச்சயமாக அங்கே ஒரு சரணாலயம் அமைத்துத்தான் ஆகவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் மான்கறி சாப்பிட்டு இருக்கிறீர்களா ? (சிரிப்பு)

திரு. வி. கே. சின்னசாமி : இல்லை. இல்லை, ஆகவே, இதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து அந்த இடத்திலே சரணாலயம் அமைப்பதற்கு ஏற்பாடு செய்வதுடன், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரில் வந்து பார்த்தால்கூட நல்லது. நிச்சயமாக அவர் முன் வருவார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஆகவே, அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்ய முன் வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, பவானிசாகர் அருகிலுள்ள சுழல்குட்டை என்ற பகுதியிலேயும், தலைமலை தெற்கு சரிவிலும் பொதுக் காடுகள் இருக்கின்றன. இங்கே மாண்புமிகு உறுப்பினர் சின்னசாமி அவர்கள் சொன்னது போல ஏறத்தாழ 400 வெள்ளி மான்களும், புள்ளிமான்களும் இருப்பதாக கணக்கு இருக்கிறது. யானைகளும் வருகின்றன. ஆனால், பிரச்சினை என்னவென்றால் இங்கே ஏறத்தாழ 10 ஆயிரம் கால்நடைகளும் மேய்ச்சலுக்காக வருகின்றன. அங்கே சரணாலயத்தை அமைத்துவிட்டால் அதற்குப்பிறகு மாடுகளை உள்ளே போவதற்கு அனுமதிக்க மாட்டார்கள். எனவே, சரணாலயம் வேண்டுமா அல்லது கால்நடைகள் அந்தப் பகுதியிலே மேய்ச்சலுக்காகச் செல்லவேண்டுமா என்பதை மாண்புமிகு உறுப்பினர் சின்னசாமி அவர்கள் ஆய்ந்து எனக்கு சொல்லட்டும். நான் நிச்சயமாக அங்கே வந்து பார்க்கிறேன்.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டையும் பாதுகாக்க வேண்டியது மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பொறுப்பு. விவசாயிகளுக்கு என்று, அதாவது கால்நடைகளுக்கு என்று தனியாக ஒரு இடத்தை, ஒதுக்கியும், சரணாலயத்திற்கு என்று ஒரு குறிப்பிட்ட இடத்தையும் ஒதுக்கித் தந்து, இரண்டையும் பாதுகாக்க வேண்டும். அதுமட்டுமல்ல, பெரியார் மாவட்டத்தில் இன்றைக்கு பவானிசாகர் அணைக்குத்தான் திருவிழாக் காலங்களிலும், புத்தாண்டுகளிலும், தைத்திருநாளிலும் ஆயிரக்கணக்கான பேர் அங்கே, சுற்றுலாவிற்காக வருகிறார்கள். அதிலும் குறிப்பாக புதுத் தம்பதிகள் வேறு எங்கேயும் போவதில்லை. அங்கேதான் வருகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுவரைக்கும் எங்ளுக்கு இப்படி ஒரு இடம் இருப்பது தெரியாமல் இருந்திருக்கிறதே. (சிரிப்பு)

திரு. வி. கே. சின்னசாமி : ஆகவே, மாண்புமிகு தலைவர் அவர்கள் கூட அங்கே வரலாம், (சிரிப்பு) இப்போதுதான் அவர்களுடைய குடும்பத்திலே அவருடைய மகனுக்குத் திருமணம் நடந்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னுடைய மணி விழாவின்போது கண்டிப்பாக வருகிறேன். (சிரிப்பு)

திரு. வி. கே. சின்னசாமி : அவர்களைக் கூட நீங்கள் கார் வைத்து அனுப்பலாம். அவர்கள் வந்தாலும் இதுபற்றி பரிந்துரை செய்வார்கள். ஆகவே, நான் தெரிவித்துக் கொள்வது, அந்த பவானிசாகர் அணையிலே பார்க் இருக்கிறது, டேமும் இருக்கிறது. இன்னும் பலதரப்பட்ட மக்கள் அங்கே வந்து செல்கின்ற வாய்ப்பும் இருக்கின்ற காரணத்தால், சரணாலயம் அமைப்பதற்கும், அந்த பவானிசாகர் பகுதியை

1990 ஏப்ரல் 19]

ஒரு சுற்றுலா மையமாகவும் அமைத்துத் தருவதற்கும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, கேள்வி வனத்துறையிலேயிருந்து சுற்றுலாத்துறைக்கு வந்துவிட்டது. இருந்தாலும்கூட ஒரு பகுதியை தனியாக ஒதுக்கி சரணாலயம் அமைக்கலாம் என்ற யோசனை பரிசீலனைக்குரியது. ஆகவே, இதுபற்றி அதிகாரிகளிடம் மேலும் கலந்து பேசி அங்கே ஒரு சரணாலயம் அமைப்பதற்கும், அதைப் போல சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் ஏதாவது செய்ய முடியுமென்றால் அதையும் செய்வதற்கும் அரசு முன் வரும்.

9.30 மணி

திரு. தூ. க. சுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பன்னாரி தலைமலை பவானிசாகர் பகுதியிலேயே அதிசயமான மான்கள் ' பில்லா ' என்ற வகை இருக்கின்றன. அதேபோல காட்டு மிருகங்களும் அதிகமாக இருக்கின்றன. குறிப்பாக கடந்த 15 நாட்களுக்கு முன்பு எனது பகுதியில், பீர்கடவு பகுதியில் ஒரு விவசாயி தன்னுடைய பட்டியிலே காவல் இருக்கும்போது, ஒரு புலி வந்து அங்கே ஆடுகளைக் குதறியது. அந்த விவசாயி தடியால் அடித்து புலியைக் கொன்றுவிட்டார். இதுமாதிரி பல சம்பவங்கள் அங்கே நடக்கின்றன. அதற்காக அந்தப் பகுதியை ஒரு சுற்றுலா தலமாகவும், அதேபோல விவசாயிகளின் குறைகள் தீர................

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுற்றுலாத் தலமாக அமைத்தால் புலிகளை அடிக்காமல் விட்டுவிடுவீர்களா ?

திரு. தூ. க. சுப்பிரமணியம் : அங்கே சரணாலயம் அமைத்துத் தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி பவானிசாகர் பகுதியை ஒட்டியதாக இருக்கிறது என்று கருதுகிறேன். அப்படியானால் ஏற்கனவே சொன்ன பதில் இதற்கும் பொருந்தும்.

திரு. எல். மூக்கையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழகத்தில் எங்கெங்கே வனவிலங்கு சரணாலயங்கள் இருக்கின்றன ? அரசு புதிதாக எங்கெங்கு வனவிலங்கு சரணாலயங்கள் அமைக்க இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு.கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, வனவிலங்கு சரணாலயங்கள் 12 இடங்களில் இருக்கின்றன. முண்டந்துறை, களக்காடு, அதேபோல ஆனைமலை சரணாலயம், முதுமலை சரணாலயம் என்று இருக்கின்றன. இவைகளைப் பற்றிய தகவல் உங்களுக்கு வேண்டுமானால், என்னிடம் தனியாக வந்து பெற்றுக் கொள்ளலாம்,

திரு. எச். எம். ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலேயே முதுமலை சரணாலயம் என்பது பிரசித்தி பெற்றது. அன்னியச் செலாவணியை ஈர்க்கும் வகையில் அங்கே வரும் வெளிநாட்டுப் பயணிகளுக்கு 'Tree Top Hous s' என்று சொல்லப்படுகிற மர உச்சி வீடுகளை கட்டி, வனவிலங்குகளைப் பார்க்கும்படி வசதி செய்துதர இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, முதுமலை சரணாலயத்தின் உள்பகுதியிலே சுற்றுலாத்துறைக்கு என்று விடுதிகள் இருக்கின்றன. என்றாலும் அந்த முதுமலை சரணாலயத்தின் மத்தியப் பகுதியிலேதான் ஊட்டியிலேயிருந்து மைசூர் செல்லக்கூடிய சாலை இருக்கிறது. இருந்தாலும் அந்த சாலை அமைந்ததற்குப் பிறகு சரணாலயத்திற்கு 'டிஸ்டர்பன்ஸ்' இருக்கிறது என்று வல்லுனர்கள் கூறினார்கள். ஆகவேதான் அங்கே சுற்றுலாத் துறையின் சார்பில் விடுதி அமைக்க வேண்டாம் என்று சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும் கூட, நான் 10 நாட்களுக்கு முன்பு அங்கே சென்று பார்த்தேன். விடுதிகள் அங்கே நிச்சயமாக அமைக்கப்படும். அது மர உச்சியிலே இல்லாவிட்டாலும் மூங்கில் போன்ற மரங்களால் வீடுகளை அமைத்துத் தர திட்டம் இருக்கிறது.

தேர் புதுப்பித்தல்.

* 5120. திரு. கே. பிச்சாண்டி :

மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருவண்ணாமலை ஆலய பெரிய தேர் புதுப்பிக்கப்படும் திட்டம் ஏதும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே,

திருவண்ணாமலை ஆலய பெரிய தேருக்கு சக்கரம் ஒன்று புதியதாக செய்து புதுப்பிக்கப்பட்டு, கார்த்திகை தீப தேர் விழா நடைபெற்றுள்ளது.